போர் 1 பொள்ளாச்சி. 9—8—51. விலை அரையணா. 6-பக்கம். வெற்றி 2

கோவை ஜில்லா இளைஞர் காங்கிரஸ.

கொள்கையும் வேலைத்திட்டமும் என்ன?

தலைவர் ஸ்ரீ என். மகாலிங்கம் விளக்குகிறார்.

விவசாயத்துறையில்:— சீர்திருத்தப்பட்ட விஞ்ஞான முறையில் கூட்டுறவு பெட்டர் பார்மிங் ஏற்படவும், உழுபவனுக்கே நிலம் சொந்தமாகவும், ரூபாய் 250—0—0 வருடாந்திர கிஸ்தி செலுத்தும் அளவுக்கு மேல் நிலம் எந்த ஒரு தனிப்பட்ட விவசாயிக்கும் இருக்கக்கூடாது எனவும் அக்கிரிகல்சரல் கிரடிட் கார்ப்பரேஷன் அபிவிருத்திக்கும் பாடுபடுதல்.

தொழில் உற்பத்தி;— தொழில்களைபரவல்முறையில் ஏற்படுத்துவதும், பெரும் தொழில் அதிபர்களின் போட்டியின்றி கூட்டுறவு முறையில் குடிசைத்தொழில்களை விஞ்ஞானரீதியில் அமைத்தல், பெறும் தொழில்களை அரசாங்கம் மேற்கொள்ளுதல்.

தொழிலாளர் பகுதி:— விவசாயத்தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளநிர்ணயத்திற்கும், வீட்டுவசதிக்கும், பயர்க்காலமல்லாத வேளைகளில் தக்கமாற்று வேலைகளுக்கும் — வருமானத்திற்கும் ஏற்பாடு செய்தல். இயந்திரத்தொழிலாளர்களுக்கும் ஷி வசதிகளுடன் வைத்தியம், கல்வி, பிராவிடன் பண்டு, வசதிகளுக்கும் அரசியல் கலப்பற்ற தக்க தொழிற்சங்க வளர்ச்சிக்கு பாடுபடுதல்.

கல்வித்துறை:— இலவச உயர்தர ஆரம்ப வார்தாக்கல்விக்கும், முதியோர் அறியாமையைப்போக்க எல்லா படித்தவர்களையும் உபயோகிக்கவும் விருப்பமுள்ள யாவருக்கும் மேற்படிப்புக்கு வசதியளிக்கவும், பள்ளி ஆசிரியர்களின் வாழ்க்கைத்தர உயர்விற்கும்பாடுபடுதல்.

சுகாதாரத்துறையில்:— கிராம வைத்தியசென்டர்கள், சுற்றுப்பிரயாண வைத்தியசாலைகள், டாக்டர்களின் ஐந்துவருடகட்டாய கிராமாந்திர சேவை, கிராமசுகாதார அபிவிருத்தி, தக்கமுறையில் குப்பைஉரம் தயாரித்தல், ஆகியவற்றிற்கு பாடுபடுதல்.

படித்தவேலையில்லாதோரை, தீர்க்கப்படவேண்டிய தேசியப் பிரச்சனைகளில் ஈடுபடுத்திப் பயன்படுத்திக் கொள்ளல். கிராமாபிவிருத்தியில், மின்சார, ரேடியோ உல்லாசப் பொழுதுபோக்கு சங்கவசதிகளை ஏற்படுத்தல் இந்தியாவில் உயர்ந்தபட்ச சம்பளம் ரூபாய் 2000—0—0 மாகவும், குறைந்தபட்சசம்பளம் ரூபாய் 100 ஆகவும இருக்கவும், விவசாயவருமானம் உள்பட எல்லாவருமானங்களுக்கும் வரிவசூலிக்கவும், மரணவரி ஏற்படுத்தவும்பாடுபடல்.

சமூக வாழ்க்கையில்:— கலப்பு மணம், ஜாதியக்குறியீடுகளைக்களைதல், இந்து சட்டச்சீர்திருத்தம், சகல மதத்தினருக்கும் பொது சிவில் கோர்ட், நீதி இலாகா சீர்திருத்தம், ஆகியவற்றிற்கு பாடுபடல்.

நிர்வாக முறையில்:— நல்ல நிர்வாகம் ஏற்படவும், நீடித்த ஏகபோக ஆதிக்கம் லஞ்சம், ஆகியவற்றைஒழிப்பதற்கும், தீண்டாமையை தீர்க்கவும், ஆலய வருமானங்களை அபிவிருத்தித் திட்டங்களில் செலவிடவும் முயற்சித்தல்.

நம் தமிழ்நாட்டைப் பொருத்தவரையில்சென்னையைத் தலைநகராகக்கொண்ட தமிழ் மாகாணத்தை அமைக்கவும், தமிழ் மொழி, கலை, கலாச்சார வளர்ச்சிக்கும், பிரிவினை வெறியர்களையும், மாணவர் இடையே வகுப்பு இனவேற்றுமை[illegible]குத்துவோரையும் எதிர்க்கவும் மு[illegible]ய்தல்.

பண்டித நேருவின் வெளிநாட்டுக்கொள்கையை பூர்ணமாக ஆதரித்தல், நாட்டின் மு[illegible]னேற்ற சக்திகளுடன், முக்கியமாக இந்[illegible] தேசிய காங்கிரஸ் உடன் பரிபூர்ணமாக [illegible]துழைத்து வேலைசெய்தல்.

நிபந்தனைகள்;-

1 இந்திய தேசீய காங்கிரஸின் லட்சிய[illegible]ளில் நம்பிக்கையுள்ளவராயிருக்க வேண்டும்.

2 வயது 12-க்கு மேற்பட்டும் 35-க்கு [illegible]ட்டிருக்கவேண்டும்.

3 அங்கத்தினர்கள் சந்தா ஆண்டுக்கு அ[illegible] எட்டு.

ஜில்லா இளைஞர் காங்கிரஸ்.

1—8—51 ஜில்லா இளைஞர்காங்கிரஸ் க[illegible]ட்டிக்கூட்டம் தலைவர் ஸ்ரீ என். மகாலிங்[illegible] தலைமையில் நடைபெற்றது. வெளியூர்களி[illegible]ருந்து மெம்பர்கள் வந்திருந்தனர். உள்ளூர் காங்கிரஸ்காரர்களும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பல முக்கிய விஷயங்கள் முடிவு செய்யப்பட்டது. தலைவர் தேநீர் விருந்து நடத்தினார்.

பொதுக்கூட்டம்,

மாலையில் தேர்நிலை வெளியில் ஸ்ரீ பி. எஸ். வேலுசாமி தலைமையில் இளைஞர் காங்கிரஸ் ஆதரவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ வி. என். ஆறுமுகம், ஸ்ரீ கே. ராஜகோபால், ஸ்ரீ எல். எஸ். கிருஷ்ணமூர்த்தி முதலியோர் பேசியபின்னர் அ. பாசித் வந்தனம் கூற கூட்டம் கலைந்தது.

5-ம் தேதி மாலை ஹரிஜன ஹாஸ்டல் மாணவர் சொற்பொழிவுக் கூட்டம் எஸ். கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. சுதந்திர[illegible] என்பது பற்றி அ. பாசித், மற்றும் பல மாணவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

செல்வாக்கு மிகுந்த தமிழ் வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 9—8—51. வியாழன்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கூட்டம்.

பழநியில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. வரவேற்புக் கமிட்டித்தலைவர் ஸ்ரீ லக்ஷ்மிபதிராஜு சிறந்தமுறையில் வரவேற்பு ஏற்பாடுகள் செய்திருந்தார். மெம்பர்கள், விசிட்டர்கள் முதலிய அனைவருக்கும் சாப்பாடு ஜாகை வசதிகள் ஒழுங்காக நன்ருக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிகூட்டத்தில் தலைவர் ஸ்ரீ கே. காமராஜ் அவர்கள் பேசுகையில் ஓமந்தூர் ஸ்ரீ ராமசாமி ரெட்டியாரின் குற்றச்சாட்டுகளுக்குஆணித்தரமான பதில் அளித்தார். பிரதம மந்திரி ஆசையும் மந்திரி ஆசையுமே பிடித்துப்பலர் திரிவதை வன்மையாகக் கண்டித்தார். ரெட்டியார் பொறுப்பற்ற முறையில் பேசிவருவதையும் சர்க்கார்மீது அர்த்தமற்றமுறையில் புகார் கூறி வருவதையும் ரெட்டியார் காலத்தில் ஏற்பட்ட குற்றங்களையும், பிரகாசத்தின் புகார்களுக்கு ரெட்டியார்தான்பொறுப்பு என்றும், பஞ்சத்தைத்தவிர்க்க கோவைஜில்லாவில்கஞ்சித்தொட்டி ஏற்படுத்தி யிருப்பதுபோல் ஏன்? ரெட்டியாரும் செய்யக்கூடாது என்றும், காங்கிரஸ் தேர்தல்களில் ஊழல்ஏற்பட்டதற்கு நான் பொறுப்பு என்று நிரூபித்தால் [illegible] ஜீநாமாச் செய்துவிடத்தயார் என்றும் [illegible]ர். பொதுவாக ரெட்டியாரின் கூற்றுகளுக்கு அர்த்தமில்லை என்றும் சிலர் பதவி ஆசைபிடித்துத் திரிவதையும் வன்மையாகக் கண்டித்தார் இதை நாம் வரவேற்கிறோம்.

தேர்தல் கமிட்டியில் ரெட்டியார் விலகிவிட்டதால் ஏற்பட்டகாலிஸ்தானத்தை பூர்த்திசெய்ய ஸ்ரீ காமராஜ் கோவை ஸ்ரீ சி. சுப்ரமணியத்தின் பெயரை அறிவித்து அனைவரும் ஏகோபித்து ஒப்புக்கொண்டு ஒற்றுமை உண்டாக்க உதவவேண்டுமெனக்கேட்டுக்கொண்டார். சி. சுப்ரமணியம் என்ற உடனே மேடைமீது இருந்தவர்களைத்தவிர மெம்பர்கள் அனைவருடைய முகத்திலும் ஒரு அதிருப்திக்குறி தென்பட்டது. ஒருவராவது சந்தோஷப்பட்டதாகத் தெரியவில்லை. தலைவர் அறிவித்துவிட்டாரே எப்படி எதிர்ப்பது என்று முணுமுணுத்துக்கொண்டனர் பலர். சுப்ரமணியம் எழுந்து நிற்கவேண்டுமென்றனர் பலர். அவர்வெட்கப்பட்டுக்கொண்டுஉட்கார்ந்தே இருந்தார்.

பொதுவாகசுப்ரமணியத்தின் நியமனத்தை யாரும் விரும்பவில்லைஎன்பது நன்ருகத்தெரிந்தது. தலைவர் ஸ்ரீ காமராஜ் அறிவித்துவிட்டதால் எதிர்ப்பைப் பலர் காட்டவில்லையாயினும் யாரும் அவரை ஒப்புக்கொள்ளவில்லை என்பதுமட்டும்நிச்சயம். இம்மாதிரி பதவி மோகம் பிடித்தவர்களையே மேலும் மேலும் பதவிகளுக்கு நியமிப்பது அர்சதமேயில்லை இவர்கள் சுயநலப்புலிகளாய் இருப்பார்களே ஒழிய பொதுநன்மையை கவனிக்கமாட்டார்கள் ஊழியர்களை அலட்சியம் செய்வார்கள். ஆகவே தேர்தல் கமிட்டியில் தலைவர் ஸ்ரீ காமராஜின் பொறுப்பு அதிகம் என்பதை நாம் எடுத்துக்காட்டுகிறோம்.

காங்கிரஸ்பொதுக்கூட்டம்.

என். ஆர். தியாகராஜன் பேசுவார்.

தேனீயில் தி. மு. க. ரௌடிகளால் தாக்கப்பட்டவரும் மதுரை ஜில்லாபோர்டு தலைவருமான ஸ்ரீ என். ஆர். தியாகராஜன் அவர்கள்26—8—51ம்தேதி ஞாயிறு மாலை 6-30 மணிக்கு தேர்நிலை வெளியில் பேசுவார்.

ரேஷன் அரிசி குளறுபடி.

நமது மாகாணத்தில் ஜூன் மாதம் 24-ம் தேதிதான் அரிசிரேஷனை 7அவுன்ஸிலிருந்து 8-அவுன்ஸிற்கு உயர்த்தினர்கள். தவிர மத்திய சர்க்கார் இரண்டு லட்சம் டன் அரிசிக்குமேல் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டதால் அரிசி ரேஷனை 8-அவுன்ஸிற்குமேல் உயர்த்த முடியாதென அச்சமயம் சென்னைசர்க்கார் சொல்லிற்று. ஆகஸ்ட்மாதம்முடிய 8-அவுன்ஸ்அரிசி கொடுக்கமுடியும் அதற்குப்பின் மத்திய சர்க்கார் அரிசி அதிகமாகக்கொடுத்தால் 8-அவுன்ஸ் அரிசிதொடர்ந்து தரமுடியுமென சென்னை சர்க்கார்சொல்லியது. ஆனல் சென்றமாதம் சென்னை அரசாங்கம் ஆகஸ்ட் 12-தேதிமுதல் 8-அவுன்ஸ் அரிசியை 6-அவுன்ஸுக்குக்குறைத்துக்கொடுக்கும்படி உத்திரவுபிறப்பித்துள்ளது பழைய 7-அவுன்ஸுக்கும் மக்கள் லாயக்கில்லை, மேலும் 6-அவுன்ஸ் கொடுத்தாலே வருடம் முடியும் வரை போதாது என்றும் சொல்லியது! ஆகஸ்ட்முடிய8அவுன்ஸிற்குபயமில்லை என்றுசொன்ன நமது சென்னை சர்க்கார் ஆகஸ்ட் முதலிலேயே 6 அவுன்ஸிற்கு குறைத்துவிட்டது. இவ்வளவுதான நமது ராஜ்ய சர்க்காரின் கணக்குகளும் புள்ளிவிபரங்களும் திட்டங்களும்! இதைவிடக்கேவலம் ஒன்றும் இல்லை. சுமார் ஒன்றரைமாதத்திற்குள் இருந்த இருப்பு அரிசியை எந்தப்புயலும் வெள்ளமும் கொண்டுபோகவில்லை. பின் ஏன்? அதுதான் சரியான கணக்கும் நிலையான கொள்கையும் சரியான திட்டத்தோடு கூடிய உத்திரவும் இல்லாதது. இந்தரேஷன் அரிசி குளறுபடியை மக்கள் சகிக்கமாட்டாமல் பசியால்வாடுவார்கள்; சென்னை அரசாங்கம் அரிசி ரேஷனைக்குறைக்காமலிருக்க ஆவனசெய்யும் என எதிர்பார்க்கிறேன்.

(ப. பாலுசாமி, கோவை.)

எதிர்பாருங்கள் விரைவில் வெளிவருகிறது.

எனெஸ்கே பிலிம்ஸ்

மணமகள்

கிருஷ்ணன், மதுரம், பாலையா, சகஸ்ரநாமம், டி. பாலசுப்ரமணியம்,
லலிதா — பத்மினி, பாண்டியன், புளிமூட்டை ராமசாமி
முதலியோர நடிப்பது. டைரெக்ஷன்: என். எஸ். கிருஷ்ணன்.

கோவை, நீலகிரி ஜில்லாக்களுக்கு வினியோக உரிமையாளர்கள்;—

கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட்.

தபால்பெட்டி 126. 224, ராஜவீதி கோயமுத்தூர்.

"லக்க ஜோசியம்"

(10-8-51 முதல் 16-8-51 வரை.)

இந்த லக்க ஜோசிய முறையில் ஒருவருடைய ஆயுள் வரையில் என்னென்ன பலன்கள் நடக்கும் என்று நிச்சயமாககூற முடியும். ஜோதிஷம், ரேகை சாஸ்திரம், ஆருடம் முதலியவைகளால் சொல்லமுடியாத சில விஷயங்களை மிகத்தெளிவாக லக்கஜோசிய ரீதியாக கூறமுடியும். ஆருட விஷயத்தில் லக்கஜோசியத்தைவிட சிறந்தமுறை வேறுகிடையாது.

லக்க ஜோசியம் வியாபார விஷயமாக அதிகமாக உபயோகப்படுகிறது. பிறந்த தேதியோ நட்சத்திரமோ அல்லது ஜனனக்குறிப்போ தெரியாவிட்டால் உங்கள் பெயரைக்கொண்டே பலன்கள் திடமாக சொல்லமுடியும். உதாரணமாக **K. RAMAN** என்ற பெயரை எடுத்துக்கொள்வோம். லக்க ஜோசியப்படி ஆங்கில எழுத்துக்குப் பின்வரும் எண்கள்கிடைக்கும்

1	2	3	4	5	6	7	8	9
A	B	C	D	E	F	G	H	I
J	K	L	M	N	O	P	Q	R
S	T	U	V	W	X	Y	Z	

K. RAMAN
2 9 1 4 1 5, 2+9+1+4+1+5 =22, 2+2=4 இந்த நெம்பர் 4 தான். **K. RAMAN** என்கிற எண்ணிற்கு வசிய எண் நெம்பர் **4**யை கவனித்தால் பலன்கள் தெரியவரும் அதே மாதிரியாக ஒவ்வொருவருடைய பெயர்களை கணிதரீதியாகசெய்து பலன் பார்க்கவும். அப்படி உங்களுக்கு வசியஎண் தெரியாவிட்டால் எமக்கு எழுதவும். பூரு ஆயுள் பலன்தெரியவேண்டுமானல் லக்கஜோசிய ஸ்பெஷல் கூப்பனைப்பூர்த்தி செய்து 14-அணு மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலமாக அனுப்பினல் விபரமான பூரு ஆயுள் பலன் கிடைக்கும்.

1
வெள்ளிக் கிழமை - மத்திய நாள்
சனிக்கிழகை - சும்மா இருப்பதே நலம்.
ஞாயிறு - அலைச்சல்
திங்கள் - சிறிய பணவரவு
செவ்வாய் - நண்பர் சந்திப்பின் மூலம்பண உதவி
புதன் - குடும்ப வாழ்க்கையில் வெருப்பு
வியாழன் - மத்திப நாள்.

2
வெள்ளி - பணவரவு
சனி - உல்லாச வாழ்க்கை
ஞாயிறு - அகாலபோஜனம்
திங்கள் - நற்சங்கம்
செவ்வாய் - அபிவிருத்திக்கேற்ற யோசனைகள்
புதன் - மத்திபநாள்
வியாழன் - திரேக அசௌக்கியம்

3
வெள்ளி - பணமுடை
சனி - ஏமாற்றம்
ஞாயிறு - அதிக நஷ்டம்
திங்கள் - சும்மா இருப்பதே நலம்
செவ்வாய் - கெட்டசெய்தி
புதன் - கெட்ட சாவகாசம்
வியாழன் - மந்த புத்தி

4
வெள்ளி - அதைரியம்
சனி - கோபம்
ஞாயிறு - பந்துக்கள் வரவு
திங்கள் - ஆரோக்கிய குறைவு
செவ்வாய் - வைத்தியச்சிலவு
புதன் - மனக்கிலேசம்
வியாழன் - கெட்டநாள்

5
வெள்ளி பிரயாணம்
சனி - குடும்ப சௌக்கியம்
ஞாயிறு - விகித அனுகூலம்
திங்கள் - சுவல்ப அலைச்சல்
செவ்வாய் பணவரவு
புதன் அதிக சிலவு
வியாழன் பந்துக்கள் வரவு சந்திப்பு

6
வெள்ளி பணவசதி
சனி அஜீர்ணம்
ஞாயிறு வெற்றிகரமான நாள்
திங்கள் காமகேளி விளையாட்டு
செவ்வாய் சந்தோஷம்
புதன் உல்லாசப்பிரயாணம்
வியாழன் நூதன சிநேகிதம்

7
வெள்ளி சுபசடங்கு
சனி வயிற்றுக்கோளாறு
ஞாயிறு அஜீர்ணம்
திங்கள் வைத்திய சிலவு
செவ்வாய் மந்தபு...
புதன் மனக்கிலே...
வியாழன் மத்திப...

8
வெள்ளி ஸ்திரி சுகம்
சனி மாதர் மகிழ்ச்சி
ஞாயிறு இனிய பொருள்மானம்
திங்கள் நற்சங்கம்
செவ்வாய் பணவரவு
புதன் திரேக அசௌக்கியம்
வியாழன் சிந்தனை

9
வெள்ளி மத்திபம்
சனி மந்தபுத்தி
ஞாயிறு அசுபநாள்
திங்கள் திரேக அசௌக்கியம்
செவ்வாய் சும்மாயிருப்பதே நலம்
புதன் கெட்டநாள்
வியாழன் மத்திபம்

லக்க ஜோசியம்.

பூரா ஆயுள் பலன் சொல்
"பொள்ளாச்சி வாசி"
ஸ்பெஷல் கூப்பன்.

முழுப்பெயர் ____________________

விலாசம் ____________________

....

____

ஜாதகமிருந்தால் தனிக் காகிதத்
எழுதியனுப்பவும். அனுப்பும் விலா
லக்கலோசியர், கே. பி. வாசுதேவன்,
453, ஐரோடு, சென்னை 19.
கூப்பனுடன் 14-அணுவுக்கு மணியா
அல்லது போஸ்டல் ஆர்டர் அனுப்பவு
ஸ்டாம்புகள் அனுப்பக்கூடாது. கூப்
இல்லாமல் வரும் கடிதங்கள் கவனிக்க
படமாட்டாது.

கேள்வி—பதில்!

கே; வாசியில் சினிமா, நாடகம் இவை
பந்தமாக கேள்விகள் கேட்டால் பதில்
ரிப்பீரா?

(தா. நடராசன்)

ப: சினிமா, நாடகம் இவை சம்பந்த
ன கேள்விகள் கவனிக்கப்படும்.

கே: காங்கிரஸிலிருந்து பலர் விலகி
ண்ணமிருக்கிறார்‌ ஏன்? வரப்
ாகும் தேர்தலில் [illegible] ரஸ் வெற்றி
றமா?

(திருமாறன்.)

ப: பச்சோந்தியின் நிறம் பலவிதமாக
றம், அதுபோல் காங்கிரஸிலிருந்து
கலமும் பதவிமோகமும் கொண்டவர்
லகுகிறார்கள். தேர்தலில் நிச்சயம் காங்
ஸ் தான் வெற்றியடையும்!

கே: கதர் ஆடை அணிந்து சிலவியா
ரிகள் கள்ளமார்க்கட் வியாபாரம் செய்
றார்கள் இந்த அரசாங்கம் ஏன் தண்டி
க்கூடாது?

(பி. ஏ. கமால்)

ப; யார் கதர்சட்டையும், கருப்புச்சட்டையும் அணிந்து கள்ளமார்க்கட் செய்தாலும் அவர்களை அரசாங்கம் தண்டிப்பதைவிட மக்களே தண்டித்துவிட்டால் இம்மாதிரி கள்ளவியாபாரம் செய்யவேமாட்டார்கள்.

கே: திராவிடக்கழகத்தாரும் திராவிடமுன்னேற்றக் கழகத்தாரும் மத்திய சர்க்கார் மந்திரிகளுக்கும், நம்மாகாண சர்க்கார் மந்திரிகளுக்கும் கருப்புக்கொடி பிடிக்கிறார்களே, அப்படியானால் நாம் நம்முடைய எதிர்ப்பை அவர்களுடைய தலைவர்களுக்கு எப்படி காட்டுவது?

(சி. என். நாகப்ப பிள்ளை)

ப: சூரியனைப்பார்த்து நாய் குலைத்தால் என்ன பயன்? அவர்கள் கருப்புக்கொடி பிடிப்பது அவர்களுக்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டது என்பதற்குத்தான். இதற்காக நாமொன்றும் கருப்புக்கொடி பிடிக்கவேண்டியதில்லை!

கே: மாகாண மந்திரிகள் வரிப்பணம் வாங்கி உல்லாசப்பிரயாணம் செய்து பணத்தையும் காலத்தையும் வீணுக்குகிறார்கள் என்று நெடுஞ்செழியனார் 22--7--51 தேதி நம் நகரில் நடந்த தி. மு. க. கூட்டத்தில் கூறினார் ஆனால் இவர் யாருடைய பணத்தில் ஊர் சுற்றுகிறார்?

[மெய்யின்பன்]

ப: அவர் ஏழைகளை ஏமாற்றி வசூலித்த உண்டியல் பணத்திலிருந்து கூத்தாடி கொள்ளையடித்த பணத்திலிருந்து ஊர் சுற்றி வருகிறார்.

கே. மு. கருணாநிதி எந்த வகுப்புவரை படித்திருக்கிறார். எங்கள் ஊரில் கழகத்துக்கு கூப்பிட்டால் வருவாரா உடனே தெரிவிக்கவும்.

(எஸ். தங்கவேல்.)

ப: உடனே தெரியவேண்டுமானால் கருணாநிதியின் கம்பெனியாருக்கு போன் செய்யுங்கள்.

கே: 4, 5, தேதிகளில் சனி ஞாயிறு கிழமைகளில் நடைபெற்ற சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் கூட்டங்களில் பேசியவர்கள் முதற்கொண்டு தலைமை தாங்கும் நபர் வரை தங்களது தேர்தல் சிங்காரங்களை ஒரே ஒப்பாரியாக வைத்து விட்டதின் நோக்கம் என்ன?

(சி. கே. நடனம்.)

ப; இப்போதிருந்தே இவர்கள் ஒப்பாரி வைத்தால்தானே தேர்தலுக்குப்பின் 'கருமாந்திரம் செய்யமுடியும்!

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:

[illegible]. A. ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்ட்:

A. K. யாகூப் சாயபு,

பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட்,
நாகமாணிக்கம் செட்டியார் & பிரதர்,
கடை வீதி

மாடர்ன் கபே,
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

S. P. M. கொடி மஜீத்பீடி.
அங்கு விலாஸ் கடை,
ஏஜண்டு: . ். ். செட்டியார்.

S. R. V. லாட்ஜிங் ஹெளஸ்
சுகாதார முறைப்படி நல்லகாற்றோட்டமுள்ள ரூம்கள் வாடகைக்கு விடப்படும்

உங்கள் அபிமானம் பெற்ற
M. குமாரவேல்த்தேவர்,
புஷ்ப வியாபாரம் கடைவீதி.

ஓர் வேண்டுகோள்

குறைந்த வாடகையில் மின்சார விளக்குக்கள் ஒலிபெருக்கி, மின்சாரம் இல்லாத இடங்களில் அமைத்துக் கொடுக்கப்படு.

M. சுப்பையகவுண்டர்,
தலைவர்,
மோட்டார் தொழிலாளர் சங்கம்,
பொள்ளாச்சி.

கண்டியம்மன் கம்பெனி,
கோயமுத்தூர் ரோடு,
மோட்டார், ஆயில் எஞ்சின், பம்ப் செட்கள், எலக்ட்ரிக் சாமான்கள், மற்றும் மெஷினரி சாமான்களும் குறைந்த விலையில் எங்கள் கம்பெனியில் கிடைக்கும்.
உரிமையாளர்:
C. ரங்கசாமிக்கவுண்டர்.

ரந்திரன் காலேஜ் ஸ்கூல்.
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. விக்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.
தலைவர்:– S. R. Chandran.

பகுத்தறிவு பாசறையிலிருந்து!

நான் இரண்டாண்டு காலமாக திராவிடமாணவர் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றி வந்தேன். ஆனால் இப்பொழுது உள்ள அரசியல் சூழ்நிலையின் காரணமாக என் போன்ற மாணவர்கள் அரசியல் கட்சிகளில் இருப்பது மட்டுமல்ல, உழைப்பதும் தவறு எனக்கருதுகிறேன். எனது படிப்பையும் எனது எதிர்கால வாழ்வையும் உத்தேசித்து மேற்படி இயக்கத்தை விட்டு ஒதுங்குகின்றேன். ஓடவில்லை! ஆகையால் எனக்கும் திராவிடர் இயக்கத்திற்கும் சிறிதும் சம்பந்தம் இல்லை எனப் பொதுமக்களுக்கும், நண்பர்களுக்கும், மாணவத்தோழர்களுக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மு. சீனிவாசன்,
(இளஞ்சேரன்.)
3—8—51

எனது நண்பர் மு. சீனிவாசன் பகுத்தறிவு, சீர்திருத்தம், என்ற தில்லு முல்லு செப்படி வித்தைக்காரர்களின் நச்சுப்பிடியிலிருந்து வெளிவந்தமைக்கு என் வாழ்த்தும் பாராட்டும் உரித்தாகுக!

அ. பாசித்,
காரியதரிசி, இளைஞர் காங்கிரஸ்.

நேயர் தபால்.

நமது நகர உயர்நிலைப்பள்ளி யருகில் இருக்கும் ஆஸ்பத்திரி கிணற்றில் ஒரு வருடத்தில் அநேக தற்கொலைகள் நடைபெறுகின்றன இதைப்பார்த்தால் மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. இந்நிலைமையில் நம் நகரம் எவ்வாறு சுபீட்சம் அடையமுடியும்! ஆதலால் இந்த கிணற்றைநகர மன்றத்தார் மூடுவதற்குள்ள தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லது கிணற்றை மூடுவதற்குசௌகரியப்படாவிட்டால் அந்தக்கிணற்றுக்குத் தகுந்த காவற்காரரை நியமிக்கவேண்டும்.

(பி. எஸ். வெங்கடேஸ்.)

திருவள்ளுவர் நிலையம்.

2-ந்தேதி ஷை நிலையக்கூட்டம் ஆளியாற்றங்கரையில் ஸ்ரீ தி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் நகரின் மேற்கு வட்டாரத்தில் தார்ரோடு போடவும், டிச்சுகளுக்கு காங்கிரீட் போட்டிருப்பதையும் பாராட்டியும், நகர சுற்று புறங்களில் கள்ளத்தனமாக குப்பைஎடுப்பதைத்தடுக்கவும், சாக்கடையிலிருந்து மண் எடுப்பதை தடுக்க உடனடியாக ஏற்பாடு செய்ய நகரசபையைக்கேட்டுக்கொண்டும் மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 3-ம் தேதி ஆடிப்பெருவிழாவையொட்டி ஆளியாற்றுக்குஷை நிலையம், சுயமரியாதைக்கழகம், வள்ளுவர் நாடகமன்ற உறுப்பினர்கள் சென்று நீராடி அங்குள்ள பம்பிங் ஸ்டேஷனையும் பார்வையிட்டு வந்து புகைப்படமும் எடுத்தனர்.

நாளது 11-ம் தேதி சனிக்கிழமைமாலை 5-30 மணிக்கு பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் கோவை நிர்மலா கல்லூரி கணித விரிவுரையாளர் ஸ்ரீமதி எ. சரஸ்வதி பி. ஏ. அவர்கள் முதியோர் கல்வியும் பெண்களும் என்பதுபற்றி சொற்பொழிவாற்றுவார்கள் என முதியோர் கல்வி காரியதரிசி ஸ்ரீ பி. எஸ். சுப்பையன் அறிவிக்கிறார்.

சுடச்சுட!?

(அ. பாசித்)

○ திண்டுக்கல் பேச்சுரிமை மகாநாட்டில் கழகத்தோழர்களின் முழக்கம்.
(செய்தி)

காலிகளும் ஷை மகாநாட்டில் பேச்சுரிமையைப்பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வந்ததாக ஒரு செய்தி கூறுகிறது.

○ இரண்டு மாதம் சிறைசென்ற தங்கப்பழத்திற்கு கழகத்தினரின் அமோகவரவேற்பு. [ஒரு செய்தி.)

இரண்டு வருடம் சிறைசென்றதிற்கு ஒருவரவேற்பும் அளிக்கவில்லையே என்று வருத்தப்படுகிறார் ஒரு கேடி!

○ ஓ. பி. ராமசாமி ரெட்டியார் காங்கிரஸ் தேர்தல் கமிட்டியிலிருந்து ராஜினாமா
(அறிக்கை]

ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தன் கட்சியில் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் சேருவார்என்று கனவு காண்கிறார்!

○ பெண்களை போட்டோ பிடிப்பது தவறாம்!
(டில்லி செய்தி)

இதை ஆட்சேபித்து சினிமா நடிகைகள் மகாநாடு கூட்டலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,

எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்

செய்து கொடுக்கப்படும்

அறிவிப்பு.

உறுதிக்கும், நேர்த்தியான வேலைப்பாட்டிற்கும்

சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு

சிமிட்டியை

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை,

பழனி

ஆகிய இடங்களில் கடைகள்

திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, பொள்ளாச்சி.

போன் நெம்பர். 63.

தபால் பெட்டி நெ. 25.

N.B:— ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi